பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 23 | ஞாயிற்றுக்கிழமை | 10.12.2023 | அதிர்வு 131

## ஜூம்மா பள்ளிவாசலின் காவலாளி சடலமாக மீட்பு

### உடலில் அடிகாயங்கள் சந்தேகநபர் அடையாளம்

ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலின் காவலாளி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காவலாளி தங்கும் அறையில் இருந்து நேற்று அவரது சடலம் 03▶

# இருளில் மூழ்கிய இலங்கை



## திடீர் மின் தடையால் பல சேவைகள் பாதிப்பு

இலங்கையின் மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக நாடு முழுவதும் நேற்று மின் விநியோகம் தடைப்பட்டது. இதனால் பல மணித்தியாலங்கள் நாடு இருளில் மூழ்கியது. போக்குவரத்து உள்ளிட்ட பல அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டன. மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். 03▶

## இன்றும் கூடுகின்றது நாடாளுமன்றம்; மின் தடை விவகாரம் எதிரொலிக்கும்!



நாடாளுமன்றத்தில் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாடாளுமன்றம் கூடுகின்றது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, குறித்த விவாதம் இன்று முற்பகல் 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளது.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில், நாடு முழுவதும் நேற்று மின்சார விநியோகம் தடைப்பட்ட விவகாரம் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மீண்டும் இடைநிறுத்தப்படும் வடக்குக்கான ரயில் சேவை




வடக்கு ரயில் மார்க்கத்தின் நவீனமயமாக்கல் நடவடிக்கை காரணமாக வடக்குக்கான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்படவுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு கோட்டையில் இருந்து 03▶




அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று தெரியாத குழப்பம் தெற்கின் பிரதான கட்சிகளில் எதில் நிலவுகின்றது எனக் கேட்டால் பலரும் பொதுஜன பெரமுன என்பார்கள். ஆனால், நிலைமை அதுவல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்தான் அடுத்த மட்டத் தலைவர்கள் இடையே அடுத்து என்ன என்ற விடயத்தில் குழப்பம் நீடிக்கின்றது என்கின்றன விடயம் அறிந்த 04▶

# மின் கட்டணக் குறைப்பு யோசனைகளை எதிரணியினர் முன்வைக்க வேண்டும்!

## நாடாளுமன்றில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர கோரிக்கை



**கொழும்பு, டிசம்பர். 10**

**"மின் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான யோசனைகளை எதிரணியினர் முன்வைக்க வேண்டும். எதிர் வரும் ஜனவரி மாதம் மின் கட்டணம் திருத்தம் செய்யப்படும்."**

**- இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் கருத்துக்கள் அடிப்படையற்றவை. மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பில் கடந்த 14 மாத காலமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்கத் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

மின்சாரசபைமறுசீரமைப்புதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஆலோசனை பெறுவதற்கு 225 உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தேன். 12 பேர் மாத்திரமே கலந்துகொண்டார்கள். முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர்களாகப் பதவி வகித்த கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க, அஜித் பெரேரா ஆகியோர் தமது ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்கள்.

மின்சாரத்துறையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மின்சார சபையுடன் தொடர்புடைய 34 தொழிற்சங்கங்களுடன் நான்கு தடவைகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டேன். வேண்டுமாயின் அதன் காணொலியை வழங்க முடியும்.

அதேபோல் மின்சார சபையின் 114 உயர்மட்ட அதிகாரிகளுடனும், மனித வளப் பிரிவிடமும் 3 தடவைகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு இந்த மறுசீரமைப்பு தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் மாபா பதிரன உட்பட குழுவின் உறுப்பினர்கள் கட்டணம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல் இந்தக் குழுவில் பணியாற்றினார்கள்.

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் ஒருசில குறைபாடுகள் காணப்படுகின்றதை ஏற்றுக்கொள்கின்றோம். தமிழ் மொழிப்பெயர்ப்பில் இரண்டு உறுப்புரைகள் நீக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே, இந்த வர்த்தமானியில் முன்னெடுக்கப்பட வேண்டிய 42 திருத்தங்களைச் சட்ட திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். திருத்தங்களுடன் வர்த்தமானி மீண்டும் வெளியிடப்படும்.

நாடாளுமன்றக் கூட்டத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவை எமக்கு இல்லை.

இந்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கடந்த 20 ஆண்டுகாலமாகக் குறிப்பிடப்பட்டன. கடந்த 14 மாதங்களாகப் பொறுப்புடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளைக் குழுவினர் முன்வைத்துள்ளார்கள். ஆகவே, அவசரப்பட வேண்டிய தேவை இல்லை.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜெய்கா நிறுவனம் ஆகிய சர்வதேச நிறுவனங்களிடம் தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் முதல் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படமாட்டாது. அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும். 225 உறுப்பினர்களும் இந்தச் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தலாம்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான குழுவை நாடாளுமன்றச் சிறப்புரிமை குழுவுக்கு அழைக்குமாறு எதிரணியின் உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்தக் குழுவை நானே நியமித்தேன். அமைச்சர் என்ற ரீதியில் நான் பொறுப்புக்கூற வேண்டும். ஆகவே, என்னைச் சிறப்புரிமை குழுவுக்கு அழையுங்கள்." - என்றார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தருவதாகக் கூறி கோடிக்கணக்கான ரூபா மோசடி செய்த பெண்

## கந்தானையில் வைத்துக் கைது



தென் கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு கோடி 65 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை மோசடி செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தானையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் வெல்டிங் பிரிவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, அவர் நாட்டின் பல பகுதிகளிலும் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

44 வயதான இந்த பெண், 5 இலட்சம் ரூபா முதல் 20 இலட்சம் ரூபா வரை ஒவ்வொருவரிடமும் மோசடி செய்துள்ளார் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் கூறியுள்ளது.



# நல்லை ஆதீனத்தில் உலகத் தமிழர் பேரவையினர்

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் குழுவினர் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)







## மீண்டும் இடைநிறுத்தப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான ரயில் சேவையே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு ரயில்வேயின் மஹவ மற்றும் ஓமந்தை வரையிலான நவீனமயமாக்கல் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, 07.01.2024 அன்று மஹவ மற்றும் அனுராதபுரத்துக்கு இடையிலான வீதி நவீனமயமாக்கல் பணிகள் ஆரம்பிக்கப்படுவதால், ஜனவரி 07 ஆம் திகதியிலிருந்து 06 மாத காலத்துக்குத் தற்காலிகமாக மஹவ மற்றும் அனுராதபுரத்துக்கும் இடையிலான ரயில் சேவைகள் இடம்பெறாது என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனவரி 07ஆம் திகதி முதல்வடக்குரயில்மாரக்கத்தின்கொழும்பு கோட்டையில் இருந்து மஹவ வரையிலும், காங்கேசன்துறையில் இருந்து அனுராதபுரம் வரையிலும் மட்டுமே ரயில் சேவைகள் இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## ஜும்மா பள்ளிவாசலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காவலாளியின் உடலில் அடிகாயங்கள் காணப்படுகின்றன என்றும், சந்தேக நபர் ஒருவர் பள்ளிவாசலுக்குள் நுழையும் காட்சிகள் சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹட்டன் – ஹிஜிராபுர பகுதியைச் சேர்ந்த பிள்ளைகளின் தந்தையான 67 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இருளில் மூழ்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை 5.10 மணி முதல் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டது. இதையடுத்து மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இரண்டு மணித்தியாலங்களில் சீராகும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்தது. எனினும், நேற்று இரவு 10.20 மணிக்குப் பின்னர்தான் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களில் மின் விநியோகம் வழமைக்கு வந்தது.

நாட்டின் 80 வீத மின்சார விநியோகம் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று இலங்கை மின்சார சபை நேற்று இரவு 11 மணியளவில் அறிவித்தது.

அத்தோடு எஞ்சியுள்ள பகுதிகளில் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான சீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

கொத்மலையில் இருந்து பியகம வரையிலான மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று நாடளாவிய ரீதியில் மின்சாரம் விநியோகம் தடைப்பட்டது என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயல் பிரியந்த தெரிவித்தார்.

இதேவேளை, மின் தடை தொடர்பில் விசாரணைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வட்டாரங்கள்.

அண்மைக் காலமாக கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் குறித்து கருத்து வெளியிட்டு வருகின்றார். அடுத்த ஆண்டு முதலில் ஜனாதிபதித் தேர்தல், பின்னர் பொதுத் தேர்தலும் மாகாண சபைத் தேர்தலும் என்று அவர் கூறுகின்றார்.

அதுதான் அவரது கட்சியின் அடுத்தமட்டத் தலைவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் அதன் போது பின்வரும் மூன்று விடயங்களில் ஒன்று நடக்கும் என அவர்கள் கணக்கிடுகின்றனர்.

முதலாவது – அந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாமல் ஒதுங்கலாம்.

அடுத்தது – அவர் போட்டியிட்டுத் தோற்கலாம்.

மூன்றாவது – அவர் போட்டியிட்டு வெல்லலாம்.

இதில் மூன்றாவது நடந்தால் நல்லது. ஆனால் இன்றைய நிலையில் அதற்கு ஐம்பது வீதம்தான் வாய்ப்பு என்று கட்சிக்குள் அந்த அடுத்த மட்டத் தலைவர்கள் எண்ணுகின்றனர்.

முதல் இரண்டில் எது நடந்தாலும் தங்களின் அரசியல் எதிர்காலமே மீண்டும் சூனியமாகிவிடும், கடந்த வருடம் ஜுலையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமது அரசியல் எதிர்காலத்தை மீண்டும் வளப்படுத்திக் கொள்ளலாம் என்று பார்த்தால் அதுவும் அடிபட்டுப் போய் விடுமோ என்று அவர்கள் விசனிக்கின்றனர்.

அதனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும்போதே முதலில் பொதுத் தேர்தலை நடத்தினால் மாவட்டங்கள் தோறும் சில எம்.பி. பதவிகளையாவது கட்சி பெற்று, கட்சியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு நடத்த வாய்ப்பு கிட்டும் என்றும், தங்களின் எதிர்காலமும் தப்பிப் பிழைக்கும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

அதனால் அண்மையில் நடந்த கட்சியின் உள்ளகக் கூட்டம் ஒன்றில் பொதுத் தேர்தலை முதலில் நடத்துமாறு கட்சித் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அத் தலைவர்கள் ஆலோசனை – அழுத்தம் – தந்தனர் என்று தெரிகின்றது. அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏதும் சாதகமாகப் பதிலளிக்க வில்லையாம். ஆனால் அவர் சிந்தனை வேறு விதமாக ஓடுகின்றது எனத் தெரிகின்றது.

பொதுத் தேர்தலை முதலில் நடத்தி, தப்பித்தவறி அதில் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறாவிட்டாலும், அதிக ஆசனங்களை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக் கொள்ளுமானால், அதை வைத்துக்கொண்டு அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமராகி, ஆட்சி அமைத்திட வழி தேடுவார், அவரைப் பிரதமராக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்து விட்டால் அதற்குப் பின்னர் நடக்கக்கூடிய ஜனாதிபதி தேர்தலில், தான் ஜனாதிபதியாக இருந்து கொண்டு போட்டியிட்டும் வெல்வது கஷ்டம் என்ற யதார்த்தம் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் புரிகின்றது என அவருக்கு நெருக்கமான வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அப்படி ஒரு நிலைமை வந்தால் பதவியில் இருக்கும் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இருவரும் அந்தந்தப் பதவியில் இருந்து கொண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மோதுவர். ஜனாதிபதி எதிர் பிரதமர் என்ற நேரடி தேர்தல் மோதலாக அது இருக்கும்.

ஆனால் அப்படி ஒரு விஷப் பரீட்சைக்கான சாத்தியத்தை ஏற்படுத்துவதற்கு ரணில் விரும்பார் என்பது புரிந்து கொள்ளத்தக்கது.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த மட்டத் தலைவர்கள் எப்படிக் குத்தி முறிந்தாலும் ரணில் அதற்கு இணங்கார் என்றும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்பில்லை, அதனால் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்குவதே புத்திசாலித்தனம் என்று அவர் கருதினால் மட்டுமே, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொது தேர்தலை நடத்த அவர் இடமளிப்பார் என்றும் அந்த வட்டாரம் கூறுகின்றது.

அப்படிப் பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்த ரணில் விக்கிரமசிங்க முன்வந்தாலும் அதற்குள்ளும் தமக்கு வசதியாக அவர் ஒரு பொடி வைப்பார் என்கின்றது அந்த வட்டாரம்.

பொதுத்தேர்தல் முடிந்து முடிவுகள் வந்ததும் தாம் ஜனாதிபதிப் பதவியைப் பூர்த்தி செய்து கொண்டு, பொதுத் தேர்தலில் கட்சிக்குக் கிடைக்கக்கூடிய தேசிய பட்டியல் எம்.பி. பதவி மூலம் தாம் நாடாளுமன்றத்துக்குள் போகக் கூடியதான ஏற்பாட்டைப் பார்த்துக் கொண்டுதான் அதற்கேற்ப அவர் காய் நகர்த்துவாராம். அதாவது பொது தேர்தலையும், அதை அடுத்து ஜனாதிபதித் தேர்தலையும் நெருக்கமான திகதிகளில் நடத்துவதன் மூலம், ஜனாதிபதிப் பதவியை தாம் விட்டு இறங்கியதும், தாம் நாடாளுமன்றத்துக்குள் தேசியப் பட்டியல் மூலம் பின் கதவால் புகுவதற்கு ஒரு வழியை – வாய்ப்பை – அவர் பார்த்துக் கொள்வார் என்கிறது அந்த வட்டாரம்.

அரசியலில் கிழட்டு நரித் தந்திரசாலியான ரணில் எதுவும் செய்வார். எப்படியும் செய்வார். அவர் காய் நகர்த்தும் போது தான் நாம் அதை பார்க்க வேண்டி இருக்கும். அவ்வளவுதான்.



# அடிப்படை உரிமைகளுடன் மனிதன் வாழ வேண்டும்!




**சர்வதேச மனித உரிமைகள் தினம் (டிசம்பர் 10ஆம் திகதி) இன்றாகும். அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகியுள்ளது.**

ஆண்டுதோறும் டிசெம்பர் 10 அன்று உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. கலாச்சாரம், சமூகம் மற்றும் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சாத்தியமான அனைத்து சூழல்களிலும் சமூகத்தின் நலனை உறுதிப்படுத்தவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (யு.டி.எச்.ஆர்) ஏற்றுக்கொண்டது. இந்த நாளை நினைவுகூறும் வகையில் ஆண்டு தோறும் மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கருத்துச் சுதந்திரம், எழுத்துரிமை, கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடி தண்ணீர் போன்ற அடிப்படை தேவைகளைப் பெற்று சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

இனம், நிறம், நிறம், மொழி, பாலினம், அரசியல், ஜாதி, மதம், பிறப்பு, சொத்து, பிற அந்தஸ்து, தேசிய அல்லது சமூக தோற்றம் என எதிலும் பாகுபாடு பார்க்கக் கூடாது என்பதை உணர்த்துவதே இந்த தினத்தை கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கமாகும்.

**மனித உரிமைகள் தினத்தின் வரலாறு**

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்ட பின்னர் மனித உரிமை பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி இந்தக் குழு 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஐ.நா. சபையில் சமர்ப்பித்தது.

இந்தப் பிரகடனத்துக்கு 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி ஐ.நா. சபையில் 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. இந்த நாள்தான் 1950 ஆம் ஆண்டு முதல் சர்வதேச மனித உரிமைகள் தினமாக அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

யு.டி.எச்.ஆர். என்பது 500 இற்கும் மேற்பட்ட மொழிகளில் கிடைக்கும் ஒரு சாசனம் மற்றும் இது உலகில் மிக அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணமாகும்.

**மனித உரிமைகள் தினம் முக்கியத்துவம்**

ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையை பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதே இப்பிரகடனத்தின் முக்கியக் கருத்தாகும். எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்களாகவும், உரிமையிலும், கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை இந்தப் பிரகடனம் வலியுறுத்துகிறது. உலகளவில் பாதுகாக்கப்பட வேண்டிய அனைவரின் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

ஐக்கிய நாடுகள் அவையின் நிகழ்வுகளில் முதன்மையான இந்த நாளில், நியூயோர்க்கில் அமைந்துள்ள அதன் தலைமைப்பீடத்தில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுவது வழக்கமாகும்.

இந்நாளில் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் பரிசு வழங்கப்படும். மேலும் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த நாளில் பல முக்கிய நிகழ்வுகளை நடத்துவது வழக்கமாகும்.

மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை அளிப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 3 லட்சம் பொதுச்சேவை மையங்களுடன் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் இணைய வழி முறைப்பாடு தெரிவிக்கும் முறை இணைக்கப்பட்டுள்ளது.

ஆணையத்தின் உடனடி சேவையைப் பெறுவதற்கு 14433 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. உரிமை மீறல்கள் நடைபெறாமல் தடுக்க ஒவ்வொருவரும் இந்த நாளில் உறுதிமொழி எடுத்து கொள்வோம்.

**அரச தரப்பினரும் வாழ்த்து**

அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் உலகளாவிய இலக்குகளை அனைவரும் அடைய முடியும். ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடு மற்றும் மனித உரிமை தரங்களை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொற்றுநோயால் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் தோல்விகளை சரி செய்யும் நோக்கத்துடன் இந்த ஆண்டு மனித உரிமைகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் ஏராளமான தலைவர்கள், அரசு அதிகாரிகள், பொது மக்கள் மனித உரிமைகள் தின வாழ்த்துக்களைக் கூறி வருகின்றனர்.

**மனித உரிமைப் பிரகடனம்**

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 30 உறுப்புரைகளைக் கொண்டது. அதாவது சகல இன மக்களும் தத்தமது சாதனை இலக்கின் பொது நியமமாக கொள்ளத்தக்கதாக இந்த அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் அமைந்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க...)

# 1877 கடற்படையினருக்குப் பதவி உயர்வு



இலங்கைக் கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு தரங்களைச் சேர்ந்த 1877 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படையினருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ப்ரியந்த பெரேராவின் பரிந்துரைக் கமைய இந்தப் பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கைக் கடற்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவு நேற்று கொண்டாடப்பட்டது.

## அடிப்படை உரிமை....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் இப்பிரகடனத்தைக் கற்றறிந்து கொள்வதோடு அந்த உரிமைகளை மனதிலிருத்தி சுதந்திரங்களுக்கான மதிப்பை மேம்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாக உள்ளது.

உறுப்புரை – 01 இல் 'மனிதப் பிறவியினர் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சகோதர வாஞ்சையுடன் நடந்து கொள்ள வேண்டும்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் உறுப்புரையே மனித உரிமைக்கு பூரண அர்த்தத்தைக் கொடுக்கிறது.


ஒரு நாட்டின் அரசால் இந்த உரிமை பாதுகாக்கப்படுமாயின் அனுப்பவிப்பது என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. இது முழு உலகுமே அறிந்த உண்மை.

அதாவது, 'சிறுபான்மையினருக்கு உரிமைகள்' என்பது ஆவண ரீதியில் காணப்பட்ட போதும் அவை நடைமுறையில் சாத்தியமற்றதாகவே இருப்பதையும் காணக் கூடியதாகவே உள்ளது.

இவர்களுக்கு மனித உரிமை என்பது ஏதோ ஒரு கட்டுபாட்டுக்கு உட்பட்டதாகவே அன்றும் இன்றும் காணப்படுகின்றது.

1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பின் போது பெரும்பான்மையினரால் சிறுபான்மையினர் அடக்கப்படுகின்றார்கள் என்ற கருத்து தமிழ்த் தலைவர்களால் முன்மொழியப்பட்டது.

இதனையடுத்து அக்காலப்பகுதியில் சிறுபான்மையினருக்கென பல விசேட சரத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதும் அவை ஏதோ ஓர் அதிகாரத்துக்கு உட்பட்டதாக காணப்பட்டதால் அதன் பூரண பயன்பாட்டை சிறுபான்மையினர் அனுபவிக்க




ஏனைய உரிமைகள் தாமாகவே அந்த நாட்டு மக்களுக்குக் கிடைத்து விடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஒருவரோடொருவர் சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற நியதி ஒரு நாட்டில் இருக்குமானால் அந் நாட்டில் சகலரது உரிமைகளும் பாதுகாக்கப்படுவதோடு அனைவரும் உரிமைகளை அனுபவிக்கும் நிலையும் நிச்சயமாகத் தோன்றக் கூடும்.

**இலங்கையில் மனித உரிமை**

இலங்கையைப் பொறுத்தவரையில், ஆரம்ப கால அந்நியர் ஆட்சி முதல் இன்றைய ஜனநாயக ஆட்சி வரை மனித உரிமைகளுக்கு பூரண முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்ததா என்பது கேள்விக்குறியே.

இலங்கையில் பெரும்பான்மை ஆட்சியே அந்நாள் முதற்கொண்டு நடைபெற்று வருவதால், அந்நியர் ஆட்சியிலிருந்து இன்று வரை சிறுபான்மையினர் உரிமைகளை வில்லை. இது போன்றே இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினர் எனும் போதும் தமிழ், முஸ்லிம், பறங்கியர் அடங்குகின்றனர். இவர்களின் உரிமைகள் பெயரளவில் மாத்திரமே உள்ளன.

30 வருட கால போர்ச்சூழல் மறைந்து, நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் கூட, நாட்டில் கடந்த காலப் பகுதியில் பலர் பேர் காணாமல் போயினர். கொல்லப்பட்டனர். பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தலைவிரித்தாடின என்றால் நம் நாட்டு மனித உரிமையை என்னென்பது?

இதே நிலையில் தான் நம் நாட்டில் ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது என்ற கசப்பான உண்மையையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.



# முல்லைத்தீவில் 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் வழக்கு

**(ந.லோகதயாளன், சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவில் கரியல் வயல், சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள 130 பொதுமக்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் வழக்குத் தொடுத்துள்ளது.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கு தொடர்பாக மக்கள் சார்பில் மன்றில் வாதிட்ட சட்டத்தரணி சி. தனஞ்சயன் கருத்துத் தெரிவிக்கையில்,

“முல்லைத்தீவு மாவட்டத்தில் சுண்டிக்குளம் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் 130 நபர்களுக்கு எதிராக வழக்குகளை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அவர்கள் அத்துமீறி குடியிருந்தனர், தாவரங்களை அழித்தனர் என்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்.

சுண்டிக்குளம் பிரதேசத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூர தொலைவில் இருக்கும் மக்களுக்கு எதிராக – இதில் இறந்தவர்களும் அடக்கம். அத்துடன், ஒருவருக்கு எதிராக மூன்று வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சரியான வரைபடங்களோ, எந்தக் காலப் பகுதியில் அப்பகுதி சரணாலயமாக இருந்தது என்பதற்கான எந்த வித தகவல்களோ இல்லாத நிலையில் போலியான விசாரணையை நடத்தி வனஜீவராசிகள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

அடிப்படை ஏதுக்கள் அற்ற நிலையில் – மக்களின் நில உரிமையைப் பறிக்கும் அரசியல் நோக்கத்துக்காகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கலாம் என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம்.

வழக்கு விசாரணையில், வழக்கு தொடுநர் தரப்பு மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் நீதிவானால் பணிக்கப்பட்டது.

இந்த வழக்கு அடுத்த வருடம் மே 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.” – என்றார்.
















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## 75 ஆண்டு நிறைவில் மனித உரிமைகள் தினம்

இன்று டிசம்பர் 10ஆம் திகதி. சர்வதேச மனித உரிமைகள் தினம். இவ்வருடம் அது முக்கியத்துவம் பெறுகின்றது.

உலக நாடுகள் இணைந்து 1948 இல் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை உருவாக்கி அதனை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்ட டிசம்பர் 10 ஆம் திகதியையே சர்வதேச மனித உரிமைகள் தினமாக அனுஷ்டிக்கிறோம். இம்முறை அதன் 75 ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் மனித உரிமைகள் தினம் என்பதால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தோடு மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவும் இதனுடன் ஒத்துப் போகின்றமையால் இது மேலும் முக்கியத்துவம் பெறுகின்றதுழ்

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். இது அடிப்படை உரிமை.

உலகில்உள்ளஒவ்வொருமனிதனுக்கும், அவனால் விட்டுக்கொடுக்க முடியாத உரிமைகளை மனித உரிமை என்று சொல்கிறோம். மனிதன் ஒவ்வொருவனும் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ விடவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் டிசம்பர் பத்தாம் திகதி உலக மனித உரிமை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

மனித உரிமைகள் என்றால் என்ன?

இந்தக் கேள்விக்கு சர்வதேச மனித உரிமைகள் சாசனம் பதில் தருகின்றது. அதை சுருக்கமாகப் பார்க்கலாம்.

சம உரிமையும், சுதந்திரமும் ஒவ்வொரு மனிதரும் பிறக்கும் போதே உடன் பிறக்கின்றன. யார் ஒருவரையும் இனம், நிறம், மொழி, மதம், பிறப்பால் பாகுபாடு செய்யக்கூடாது. யாரும் யாருக்கும் அடிமை இல்லை. யாரும் சித்திரவதைக்கு உட்படலாகாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். நியாயமின்றி யாரையும் தடுத்து வைக்கக் கூடாது. அத்துடன், நீதிமன்றத்தை அணுக - குற்றம் நிரூப்பிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி எனக் கருதப்பட - அந்தரங்கங்களை பாதுகாக்க - சட்டத்திற்குட்பட்டு அனைத்து இடங்களுக்கும் செல்ல - சித்திரவதையிலிருந்து தப்பிக்க - புகலிடம் கேட்க - தேசிய அடையாளத்துக்கு உரிமை கோரிப் பேண - குடும்பம் நடத்த - சிந்தனை, சமய, கருத்துச் சுதந்திரத்துக்கு - மக்களாட்சிக்கு - சேர்ந்திருக்க - சமூக பாதுகாப்புக்கு - விளையாட - ஓய்வெடுக்க - கல்விக்கு - உணவுக்கு - உள்ள உரிமைகள் மனித உரிமைகளாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதில் 53 நாடுகள் அங்கம் பெற்றன.

முதல் பணியாக, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தக் குழு முடிவு செய்தது. இதற்காக அமெரிக்க அதிபரின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு, 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு உலக மனித உரிமைகள் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்தது.

இந்தப் பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் 58 நாடுகள், 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி அங்கீகாரம் வழங்கின. இந்த நாள்தான் 1950 ஆம் ஆண்டு முதல் உலக சர்வதேச மனித உரிமை நாளாக அறிவிக்கப்பட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப்படுத்தக் கூடாது.

மனிதனின் கௌரவத்தையும் அவனின் பிரிக்க முடியாத உரிமைகளையும் அறிந்து, உணர்ந்து, அங்கீகரித்து, ஏற்றுக்கொள்வதே அவனுக்கு அளிக்கும் சுதந்திரம், நீதி, சமாதானத்தின் அடித்தளம் என்று சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. யாராலும் யாருக்கும் வழங்கப்பட்டதும் அல்ல. ஒவ்வொரு மனிதன் பிறக்கும்போதும் அவனுடம் பிறந்ததுதான் மனித உரிமை. அதனால், ஒருவரின் உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

இன்னும் சொல்லப் போனால், ஒரு குடிமகனின் மனித உரிமையைப் பறிக்க அந்த நாட்டின் அரசுக்குக்கூட அதிகாரம் இல்லை. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான உரிமைகளும் அடிப்படை சுதந்திரமும் உள்ளது. இவற்றை உலகுக்கு உரக்கச் சொல்லும் நாள்தான் உலக மனித உரிமை நாள்.

வாழ்வுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை போன்ற அடிப்படை உரிமைகளை அனைவரும் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும். உயிர் வாழ்வதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரம், மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கான கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற அடிப்படை அம்சங்கள் ஒருவன் மனிதனாக வாழ்வதற்கு உரிய அடிப்படை உரிமைகள். இவற்றையே மனித உரிமை என்று சொல்கிறோம்.

நாடு, சமூகம், பொருளாதாரம், அரசியல், நீதி ஆகியவற்றில் மனிதன் மனிதனாக வாழ்வுதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். நாடு, மொழி, ஜாதி, இனம் பொருளாதாரம் போன்ற எந்தக் காரணத்தைக் காட்டியும் ஒருவனுடைய இந்த உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துவதே உலக மனித உரிமை நாள்.

ஆனால் அது இலங்கையில் தமிழர்களுக்கு கடந்த 75 ஆண்டுகளாக மறுக்கப்பட்டிருப்பது தான் தமிழர்களின் துன்பியல் நிலைமையாகும்.



# இந்த நாட்டின் கிரிக்கெட்டை அரசியல் தலையீடுகளின்றி பேணுவதே எனது நோக்கம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டை அரசியலுக்கு அப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2030ஆம் ஆண்டு இலங்கையின் கிரிக்கட் எங்கு இருக்க



வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வை தமக்கு இருக்கின்றது என்று தெரிவித்த ஜனாதிபதி, அதனால் தான் இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபாவை பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கியதாகவும், எதிர்காலத்தில் அதனை வருடாந்தம் 2 பில்லியன் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நிதி நிர்வாகத்தையும், பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்தியையும் சுயாதீன நிதியம் ஒன்றிடம் ஒப்படைக்க



எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, சகல செயற்பாடுகளையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்து எதிர்பார்த்த இலக்குகளை அடைவதே அதன் எதிர்பார்ப்பாகும் என்றும் கூறினார்.

அத்துடன், கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டத்தின் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விளையாட்டானது வணிகமயமாக்கப்படும் என்றால் அது அரசியலில் இருந்து விடுபட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் சுபீட்சமான நாடாக மாறுவதற்கான திட்டங்களை அரசு ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது என்றும், கிரிக்கெட்




போன்ற ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கும் நாடாக இலங்கை மீண்டும் மாற வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற கொழும்பு கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்துவைத்த ஜனாதிபதி, பின்னர் விளையாட்டு சங்க உறுப்பினர்களுடன் புகைப்படம்




எடுத்துக் கொண்டார்.

1996 உலகக் கிண்ணத்தை வென்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் 2014 பந்துவீச்சு 20 (ரி 20) உலகக் கிண்ணத்தை வென்ற அணிக்கும் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவம் இதன்போது வழங்கப்பட்டது. மேலும் பல வருடங்களாக கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு பங்களிப்புச் செய்த உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

ஜனாதிபதிக்குக் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வாழ்நாள் அங்கத்துவம் அதன் தலைவர் நிஷாந்த ரணதுங்கவால் வழங்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்தின் 150 ஆவது ஆண்டு விழாவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் ஒரு அங்கமாக மாறியுள்ளது. இங்கிலாந்தில் கிரிக்கெட் தொடங்கிய காலத்திலிருந்தே, அணிகள் இணைந்து விளை



யாட்டுக் கழகங்களை உருவாக்கின. மாலுமிகள் வரும்போதும், அவர்களும் தற்காலிக கிரிக்கெட் அணியை உருவாக்

(10ஆம் பக்கம் பார்க்க...)

# இந்த நாட்டின் கிரிக்கெட்டை....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கினர். மலாய் படைப்பிரிவின் படைமுகாமில் தங்கியிருந்த வீரர்கள் கோல்ட்ஸ் என்ற அவர்களின் கிரிக்கெட் அணியை உருவாக்கினர்.

ஒருமுறை கோல்ஸ் மற்றும் றோயல் கல்லூரி, புனித தோமஸ் மற்றும் வெஸ்லி கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியின் பின்னர், சிங்கள விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் மற்றொரு கழகத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில் தமிழ் யூனியன் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, இன அடிப்படையில் பல விளையாட்டுக் கழகங்கள் உருவாகின. இவை மலாய், பறங்கியர், சிங்களம், தமிழ் ஆகிய வார்த்தைகளால் மட்டுமே பெயரிடப்பட்டிருந்தாலும், அரசியல் கட்சிகளைப் போலல்லாமல் அனைத்து இன மக்களும் இதில் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.




துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான அரசியல் கட்சிகளில் இதனைக் கண்டுகொள்ள முடிவதில்லை. அதனால்தான் நாம் இன்று இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், உங்களது பங்களிப்பு இலங்கையின் விளையாட்டு வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையின் கிரிக்கெட் ஆரம்பத்தை எடுத்துக்கொண்டால், பிரித்தானியர்கள் சிலர் இன்றுள்ள விதிகள் எதுவுமின்றி வெறும் மட்டையால் பந்து விளையாடிய காலத்திலிருந்து இன்று வரை கிரிக்கெட்டின் பரிணாமத்தை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். நாங்கள் டெஸ்ட் கிரிக்கெட்டைப் பார்த்திருக்கின்றோம், அந்தக் காலத்தைக் கடந்திருக்கிறோம். இவ்வாறு நோக்கும்போது, கிரிக்கெட் வேகமாக மாறும்



விளையாட்டு. நவீன தொழில்நுட்பத்துடன் தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக, விளையாட்டும் இப்போது மாறி வருகிறது.

இந்த ஆண்டு வரவு – செலவுத் திட்ட விவாதத்திலும் கிரிக்கெட் முக்கிய இடம் பிடித்திருப்பதை பார்த்தோம். இம்முறை வரவு – செலவுத் திட்ட விவாதம் முக்கியமாக கிரிக்கெட் தொடர்பிலேயே இடம்பெற்றது, வரவு – செலவுத் திட்டம் பற்றி அல்ல, அதாவதுஅரசையும் வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளையும் விமர்சிக்க எதிர்க்கட்சிகளுக்கு எதுவும் இருக்கவில்லை.

இதேவேளை, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருக்குப் பதிலாக புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். கிரிக்கெட்டின் முன்னைய நிலைமையை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது குறித்து அமைச்சர் தற்போது சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுடன் (ஐ.சி.சி.) கலந்துரையாடி வருகின்றார். அவை அனைத்தும் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு, எமக்கு மீண்டும் உலகத்துடன் செயற்பட கிடைக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம்.

2030 இல் இலங்கையின் கிரிக்கெட் எங்கு இருக்க வேண்டும் என்ற இலக்கு எனக்கு உள்ளது. எனவேதான் இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் பாடசாலை மட்ட கிரிக்கெட் வளர்ச்சிக்காக 1.5 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கு மட்டுமன்றி இந்த இலக்கு நிறைவேறும் வரை இந்த நிதியை வழங்குவோம். இதனை வருடத்திற்கு 2 பில்லியன் வரை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நாட்டில் கிரிக்கெட்டை முகாமைத்துவம் செய்வதில் அதற்கு அரசு அதிகம் தலையிடாமல் இருப்பதே எமது நோக்கமாகும். மேலும், எதிர்காலத்தில் கொண்டு வரப்படும் புதிய சட்டங்கள் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும்.

இந்த நிதி நிர்வாகத்தையும் பாடசாலை கிரிக்கெட்டின் வளர்ச்சியையும் ஒரு சுயாதீன நிதியத்துக்கு நாம் ஒப்படைப்போம். மீதமுள்ள பகுதி நிர்வாக சபைக்கு உள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படும். விளையாட்டுத்துறையை மேம்படுத்த அமைச்சுக்கு அதிகாரம் உள்ளது. மைதானங்கள், உபகரணங்கள் என எதற்கு இந்த நிதி செலவிடபபட்டாலும் அது மூலதனச் செலவில் குறிப்பிடப்படும். எனவே, நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் உள்ள பாடசாலை கிரிக்கெட் முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்பதே அதன் அர்த்தம். அதன் பின்னர் எமக்கு மாகாண மட்டத்தில் கிரிக்கெட்டை முன்னேற்ற முடியும்.

நாம் தொடர்ந்து கிரிக்கெட் வீரர்களை உருவாக்க வேண்டும். இந்த நிதியை கிரிக்கெட் வீரர்களை உருவாக்கவே நாம் பயன்படுத்துகிறோம். ஆண் பிள்ளைகள் மாத்திரமன்றி, பெண் பிள்ளைகளும் கிரிக்கெட் விளையாடுகிறார்கள். இதன் மூலம் நாட்டின் கிரிக்கெட் விளையாட்டை ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு கொண்டு வருவோம்.

மேல்மாகாணத்தில் கிரிக்கெட் பற்றிப் பேசும்போது கொழும்பில் உள்ள சில பாடசாலைகளைத் தவிர பாதுக்க, கிரிந்திவெல, அகலவத்தை போன்ற பகுதிகளில் கிரிக்கெட் எந்த வகையிலும் வளர்ச்சியடையவில்லை. எனவே அனைத்து பாடசாலைகளுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பு



இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

கிரிக்கெட் ஒரு வளர்ந்து வரும் விளையாட்டு. எல்லா ஆட்டத்திலும் எங்களால் வெற்றி பெற முடியாது. ஆனால் அவற்றில் சிலவற்றை நம்மால் வெல்ல முடியும். எனவே, இதற்காகப் பணத்தைச் செலவிடத் தயாராக உள்ளோம். அத்துடன், தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தை விளையாட்டுப் பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்வதற்கும் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். அதற்காக நாம் கிரிக்கெட் நிர்வாக சபையை இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், வளமான தேசமாக மாற்றவும் அவசியமான திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். பொருளாதாரத்தில் மட்டுமன்றி பாடசாலைகளில் கிரிக்கெட் போன்ற ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கும் நாடாக நாம் திகழ்வதை உறுதி செய்வோம். பொருளாதாரம் என்பது பணம். விளையாட்டு வணிகமய



மாக்கப்பட்டால் நாமும் அதற்குள் நுழைவோம். மேலும், விளையாட்டை வணிகமயமாக்கினால், அதை அரசியல் தலையீடு இல்லாமல் பேணிக் கொள்வோம்." – என்றார்.

பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஆஃப் தி ஏர்ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக, தற்போதைய மற்றும் முன்னாள் சிரேஷ்ட கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் கழக அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## புத்தளம் கடற்பகுதியில் மூழ்கியிருந்த நிலையில்

# நான்கு கிலோ தங்கம் மீட்பு!

(ரஸீன் ரஸ்மின்)

கடற்பகுதியில் மூழ்கியிருந்த நிலையில் 4 கிலோகிராமுக்கும் அதிகமான தங்கம் மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

புத்தளம், களப்பு – பத்தலங்குண்டு தீவுக்கு அண்மித்த கடற்பகுதியிலேயே இந்தத் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான விஜய கடற்படை கப்பலுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, நேற்றுமுன்தினம் குறித்த கடற்பகுதியில் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்று நீரில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளமை கடற்படையினரால் அவதானிக்கப்பட்டது.

நீரில் மூழ்கிக் கிடந்த அந்தப் பார்சலில் மிக நுணுக்கமாக அடைக்கப்பட்டிருந்த நான்கு கிலோவுக்கும் அதிகமான தங்கம் இருந்தமை சோதனையின்போது தெரியவந்தது.

சட்டவிரோதமாக இந்தத் தங்கத்தை நாட்டுக்குள் கொண்டுவந்தவர்கள், பின்னர் எடுத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையில் நீருக்குள் மூழ்கடித் திருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் என்று கடற்படைநினர் குறிப்பிட்டனர்.

மேலும், இந்தத் தங்கக் கடத்தலில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 27 மற்றும் 35 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், அவர்கள் பயணித்த டிங்கி இயந்திரப் படகு மற்றும் கைப்பற்றப்பட்ட 4 கிலோகிராம் தங்கம் என்பவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## 7 கோடி ரூபா பணத்துடன் இளைஞர்கள் 7 பேர் கைது



கொழும்பின் முன்னணி ஹோட்டலொன்றுக்கு அருகாமையில் 7 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்துடன் இளைஞர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பயணித்த 2 கார்களும், அதற்குள் இருந்த துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புதிய மின்சார சபை சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

புதிய மின்சார சபை சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுள்ளது.

மின்சாரத்துறை தொடர்பான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தத் தேவையான விதிமுறைகளைத் தயாரித்தல், அதற்காக தேசிய மின்சார ஆலோசனைக் குழுவை ஸ்தாபித்தல் என்பன இந்தச் சட்டமூலத்தினுடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் வர்த்தகத்துக்கான நிறுவனங்களை ஸ்தாபிக்கவும் இதனூடாக முன்மொழியப்பட்டுள்ளது.




டிசம்பர் மாதம் 05 ஆம் திகதியிடப்பட்டுள்ள இந்த மேலதிக வர்த்தமானி மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரின் பணிப்புரைக்கமைய வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அமர்வில் வெளிக்கொணரப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.12.2023

## மேஷம்

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்று வீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்,

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரண மாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.

## ரிஷபம்

நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறை யான கண்ணோட்டம் காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும் போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசி யம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதி யான போக்கு நல்ல பலன் தரும்.

## கடகம்

பாதுகாப்பின்மை உணர்வு காணப் படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண் டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கான்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரண மாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற் றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டா லும் நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன் றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சி யடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்க-ளிடம் பதட்டம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லு றவு காணப்படாது. நேர்மையாக பணி யாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக் கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பய ணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் தலைவலிக்கு ஆளாவீர்கள்.

## துலாம்

இன்று சிறிது மந்தமாக காணப்படு வீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல் களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணி யாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலான தாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.12.2023




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். எந்த விஷயத்தையும் யதார்த்தமாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்கள் தருவதைக் காண்பீர்கள். சமநிலையோடு இருந்தால் சரியான முடிவெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும்.






# ஆசிய மாஸ்டர்ஸ் மெய்வல்லுநர் போட்டியில் குமாரி பண்டார 6 பதக்கங்கள் வென்று சாதனை




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பிலிப்பைன்ஸ், நியூ கிளாக் சிற்றி மைதானத்தில் இடம்பெற்ற ஆசிய மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையின் தாமர குமாரி பண்டார மூன்று தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப்பதக்கத்தையும், இரண்டு வெண்கலப்பதக்கங்களையும் வென்றுள்ளார்.

நீளம் பாய்தல், 4X100 மீற்றர் அஞ்சலோட்டம், 4X400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களையும், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டம் மற்றும் 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்.



# குருநாகல் மலியதேவ கல்லூரியை வென்றது கொழும்பு உவெஸ்லி!




**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான, டிவிஷன்-1உதைபந்தாட்டபோட்டியில்கொழும்பு உவெஸ்லி கல்லூரி வெற்றி பெற்றது.

கொழும்பு கடற்படை மைதானத்தில் குருநாகலை மலியதேவ கல்லூரிக்கு எதிரான போட்டியில், கொழும்பு உவெஸ்லி கல்லூரி 4–1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.